## கேள்வி:

## "சபை ஆரம்பித்தபோது அது எப்படியிருந்தது?"

## பதில்:

*வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும், நமக்கு ஒரு தரமும், எடுத்துக்காட்டும் தேவை. உதாரணமாக, மணி என்ன என்று சொல்வதற்கு, ஒருவர் தமது கடிகாரத்தின் வரலாற்றைச் சார்ந்திருக்க மாட்டார். "இந்தக் கடிகாரம், ஸ்காட்லாந்தைச் சேர்ந்த எனது தாத்தாவினுடையது" என்று கூறுவதானது, அது சரியான நேரத்தைக் காட்டும் என்ற உத்தரவாதம் அளிப்ப தில்லை. அது போலவே, "ஸ்காட்லாந்தைச் சேர்ந்த எனது தாத்தா இந்த சபையின் உறுப்பினராயிருந்தார்" என்ற கூற்றானது, அது புதிய ஏற்பாட்டு சபை என்ற பொருளைத் தராது. நேரத்தைக் காப்பதில், நம்பத் தகுந்த ஒரே தரமாக இருப்பது - தேவனுடைய சூரியன் மட்டுமே. அமெரிக்க நாட்டில், சூரியனால் கணக்கிடப்படும் அன்றாட நேரச் சைகைகள் வர்ஜீனியாவின் அர்லிங்டனின் உள்ள கடல் கணிப்பு மையத்தினால் பரப்பப்படுகின்றன. எல்லாக் கடிகாரங்களும் இந்தச் சைகைகளுக்கு, ஒத்திசையச் செய்யப்பட முடியும்.*

*கடையில் வாங்கும் ஒவ்வொருவரும், ஒரு பவுண்டு அரிசி பொட்டலத்தில் பதினாறு அவுன்ஸுகளும், அல்லது ஒரு கெஜ துணியில், முப்பத்தாறு இன்ச்சுகளும் உள்ளனவா என்று அறிய விரும்புகின்றனர். இவ்வாறு நாம், எடைகளும், அளவுகளும் ஒப்பிடப்படும் விதத்திற்கான தரங்களைப் பெற்றுள்ளோம், எடுத்துக்காட்டாக, வாஷிங்டன் D.C. யில் உள்ள தர நிர்ணயக் கழகத்தின், தேசீய அளவைப்படியிலான 3.28 அடி நீளமுள்ள முன்மாதிரி மீட்டர் அளவை ஒன்றும், 2,204-பவுண்டு எடையுள்ள முன்மாதிரி கிலோ கிராம் ஒன்றும் வைக்கப் பட்டுள்ளன. பிரென்ச்சு அரசால் அமெரிக்க நாட்டிற்கு நன்கொடையாகத் தரப்பட்ட இவ்விரண்டு முன்மாதிரிகளும் 90 சதவீதம் பிளாட்டினம் மற்றும் 10 சதவீதம் இரீடியம்*

உலோகங்களைக் கலந்து செய்யப்பட்டதாய் உள்ளன, ஏனெனில் இவ்வுலோகங்கள் மிக மிகக் குறைவான அளவே விரியும் அல்லது சுருங்கும் தன்மை கொண்டவை. இந்த முன் மாதிரியிலிருந்து வேறுபடும் எந்த அளவையும் சரியற்றதாகும்.

அதே போல, மார்க்கத்திற்கும் மாறுபாடு அல்லது வேறுபாடு இல்லாத தரமான முன்மாதிரி ஒன்று இருக்க வேண்டும்! முன்மாதிரியான சபையின் மேன்மையான முக்கியத்துவத்தை உணர்ந்த தேவன், இன்றும்கூட அந்த சபையை காணக்கூடிய வகையிலேயே வைத்துள்ளார், எனவே எல்லா சபைகளும் அதைத் தங்கள் உதாரணமாகவும், தரமா கவும் எடுத்துக் கொள்ளலாம். தேவனுடைய தரமான இம்முன் மாதிரியானது வாஷிங்டன் அல்லது வேறொரு நகரத்தில் பெட்டியொன்றில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கவில்லை. தேவனுடைய இந்த முன்மாதிரியானது அழிவில்லாத வேதா கமத்தில் உள்ளது. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், இந்த முன்மாதிரி நிலைத்திருக்கும். மனிதர்களுடைய பாரம்பரியங்கள் வரலாம், போகலாம் ஆனால் தேவனுடைய சபையானது நிலைத்திருக்கிறது. மிகவும் துல்லியமான ஜாக்கிரதையுடன் செய்யப்பட்ட பிளாட்டினம் மற்றும் இரீடியத்தால் ஆன முன்மாதிரிகள் கூட சற்று வேறுபடலாம்; ஆனால் வேதாகமம் கோடை மற்றும் குளிரினால் பாதிக்கப் படுவதில்லை, காலங்கள் செல்வதினாலோ அல்லது நாடுகள் வீழ்வதினாலோ வேதாகமம் பாதிக்கப்படுவதில்லை. மனிதன் ஏற்படுத்திய தரம் என்பது முழுமையற்றதாகும் என்று ஒப்புக்கொள்ள வேண்டும், ஆனால் தேவன் தாம் ஏற்படுத்திய முன்மாதிரியை சுயாதீனப் பிரமாணமாகிய ''பூரணப் பிரமாணம்" (யாக். 1:25) என்று அறிவித்துள்ளார்.

முன்மாதிரியான மனிதர் ஒருவரை, மற்ற எல்லாரும் தங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளக் கூடிய அளவு தரமுள்ள மனிதரை ஒருவர் காண விரும்பினால், "மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய நான்கு சுவிசேஷங் களுக்குச் சென்று அவரைக் காணுங்கள்" என்று வினயமான ஆய்வுத் தேடல்கள் பதில் அளிக்கின்றன. முன்மாதிரியான சபையை ஒருவர் காணவிரும்பினால், ஆரம்பத்தில் இருந்த சபையை அவர் காண வேண்டும், மனிதர்கள் அதைக் கறைப்படுத்தி, வஞ்சிப்பதற்கு முன்பு அது இருந்த நிலையை ஆராய வேண்டும். ஆதியில் சபை இருந்த வரலாறானது புதிய

ஏற்பாட்டில், அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் தொடங்கிக் காணப்படுகிறது.

## சபையில் பிரவேசிக்க தேவனுடைய மாதிரி

தேவனுடைய சபையில் பிரவேசிப்பதற்குள்ள சட்டம் என்ன? இயேசு, மேகங்கள் மூலமாக தமது பிதாவினிடத்திற்குச் சென்றபோது, அவரால் கட்டளையிடப்பட்ட அவரது அப்போஸ்தலர்கள் எருசலேமுக்குச் சென்று பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காகக் காத்திருந்தனர். தேவனுடைய ஆவியானவர் அவர்கள் மேல் வந்தபொழுது, அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய், ஓரிடத்தில் தரித்திருந்தனர். என்ன சொல்ல வேண்டும் என்றோ, எதைப் பிரசங்கிக்க வேண்டும் என்றோ அவர்கள் கவலைப்பட வேண்டியிருக்கவில்லை, ஏனெனில் பரிசுத்த ஆவியானவரே அவர்களது நாவுகளில் வார்த்தைகளை வைக்கவேண்டியிருந்தது. இன்றைய நாட்களின் பிரசங்கியார்களிலிருந்து அவர்கள் மாறுபட்டவர் களாய் இருந்தனர் - தேவனுடைய ஆவியானவர் தவறிழைக் காதவராதலால், அவர்கள் தங்கள் வார்த்தை, தங்கள் உபதேசம் இவற்றில் தவறிழைக்காமல் இருக்க முடிந்தது. இவ்விதமாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்த இந்த மாதிரியை கற்றுக்கொள்வதில் உள்ள முக்கியத்துவத்தை நாம் காணுகின்றோம்; ஆவியானவரினால் ஒவ்வொரு வார்த்தை யிலும் வழி நடத்தப்படுகையில், தேவன் எதைப் பிரசங்கிக்க விரும்பினாரோ அது நிச்சயமாகவே அறிவிக்கப்பட்டது. ஏவப்பட்ட அந்தப் பிரசங்கியார்கள், சபைக்குள் பிரவேசிப்பதற் குரிய தேவைகளைப்பற்றி என்ன கூறினார்கள்?

### இயேசு கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கித்தல்

ஏவப்பட்ட இந்த மனிதர்கள் முதலாவது பிரசங்கித்தனர் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் குழந்தைகளிடம் பேசிக் கொண்டிருக்கவில்லை, அல்லது கேட்பவற்றைப் புரிந்து, அதன் படி செயல்பட இயலாதவர்களிடம் பேசிக் கொண்டிருக்க வில்லை, பொறுப்புள்ள மக்களைத் தங்கள் வார்த்தைகளினால் மாற்றவே அவர்கள் விரும்பினர். அந்த மக்கள் தங்களை இரட்சித்துக்கொள்ள ஆவியானவரின் எவ்விதமான அபிஷே கத்தையும் எதிர்பார்க்கவில்லை. ஒருவேளை அப்படி அவர்கள்

எதிர்பார்த்திருந்தால், பிரசங்கம் என்பது தேவையற்ற தாயிருந்திருக்கும்; தேவன் அனாவசியமான விஷயங்களில் நேரத்தை வீணாக்கியிருக்க மாட்டார். ஆனால், பிரசங்கம் என்பது அன்றும் தேவையாயிருந்தது, இன்றும் தேவையா யிருக்கிறது. இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டமானது சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கிப்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது (1 கொரி. 1:21; ரோமர் 10:13, 14). வசனத்தைப் பிரசங்கிக்காமல், மக்கள் இரட்சிக்கப்பட முடியாது என்பதால், அந்த வேலையைச் செய்யும்படி கிறிஸ்து தமது அப்போஸ்தலர் களுக்கு ஜாக்கிரதையாய்ப் பயிற்சியளித்தார்.

அவர்கள் பிரசங்கித்தது என்ன? அப். 2ல், நாம் பெந்தெகொஸ்தே நாள் அன்று, பேதுருவின் முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப்பற்றிப் படிக்கிறோம்:

> ‘‘இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப் படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படி யேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது.’’
>
> “... அவருடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லை, அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை. ... ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத் தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்’’ (வ. 22-36).

ஆவியானவரால் ஏவப்பட்ட பிரசங்கியார், இந்த வலிமை மற்றும் மகிமையுள்ள உண்மைகளை அறிவித்தபோது, அதைக் கவனித்துக் கொண்டிருந்த கூட்டத்தார், ‘‘இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தல ரையும் பார்த்து: ‘சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?’ என்றனர்’’ (வ. 37). அந்த வினயமான, ஆத்துமா ஆராய்ந்தறிகிற வினாவிற்கு, பிரசங்கியார்கள் என்ன விடையளித்தனர்?

**சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல்**

தேவனுடைய பிரசங்கியார்கள், சர்வசிருஷ்டிக்கும் முதல் பேறானவராகிய இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நற்செய்தியை மட்டும் அல்ல, மக்கள் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் கூறினார்கள். அந்த பிரசங்கியார்கள், இயேசு ஒவ்வொருவருக்காகவும் மரித்தார் என்று விசுவாசித்தனர், ஆனால் அதுவே போதுமானதென்று அவர்கள் எண்ணவில்லை; ஆண்கள், பெண்கள் அனைவரும் அவருடைய பலியைப்பற்றி அறிய வேண்டும் என்று அவர்கள் எண்ணினர். ஆகவே, அவர்கள், சிலுவையின் வரலாற்றைப் பிரசங்கம் செய்தனர். ஒவ்வொருவரும் (அவர்கள் என்ன செய்திருப்பினும், அவர்கள் வாழ்க்கை எப்படியிருப்பினும்) இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள் என்று அப்போஸ்தலர்கள் நம்பவில்லை. அகிலம் முழுவதையும் படைத்த தேவனுக்கு முன்பாக, அவர்கள் பாவத்தில் இழந்து போகப்பட்டுக் கொண்டிருப்பதை அப்போஸ்தலர்கள் மக்களுக்குக் கூறினார்கள்.

மக்கள், தாங்கள் பாவத்திலிருப்பதை உணர்ந்து, அப்பாவத் திலிருந்து மீண்டு வருவதற்கான வழியைக் கேட்பதற்குக் கெஞ்சினார்கள். அவர்கள், தேவனற்று, நம்பிக்கையற்று தாங்கள் மரித்துப்போவதை விரும்பவில்லை. அந்தப் பிரசங்கியார்கள் என்ன கூறினார்கள்? என்று மறுபடியும் நாம் கேட்கிறோம். ‘‘இரட்சிக்கப்படுங்கள், உங்கள் விருப்பத் தேர்வின்படியான சபையில் சேர்ந்துகொள்ளுங்கள்’’ என்று கூறினார்களா? நல்அர்த்தமுள்ள ஊழியர்கள்கூட, இன்றைய நாட்களில் இவ்விதம் பேசுகின்றனர்; ஆனால், தேவனுடைய ஊழியர்கள், ஒரு முன்மாதிரிப் பிரசங்கத்தில் இவ்வாறு பேசினார்களா? அவர்கள், “நீங்கள் விசுவாசித்தால் போதும், இரட்சிக்கப்படுவீர்கள்’’ என்றார்களா? இல்லை! பேதுரு அவர்களை நோக்கி: “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” (வ. 38) என்று கூறினார். தேவனுடைய அங்கீகாரத்தின்படி, இந்தப்பதிவு மாற்றப் பட்டிருக்கவில்லை. இது, வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் ஒத்திசைந்தே உள்ளது. இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் மட்டும் போதும் என்று நான் கூறினால், தெய்வீக

முன்மாதிரிக்கு முரண்படுகிறவனாய் இருப்பேன். விசுவாசம் தேவைதான்; விசுவாசமில்லாமல் ஒருவர் தேவனைப் பிரியப் படுத்த முடியாது - ஆயினும் பிசாசுகளும் விசுவாசிக்கின்றன! ஆயிரக் கணக்கானோர் விசுவாசிக்கின்றனர், ஆனால் இரட்சிக்கப்படவில்லை. ஒருவர், தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அப்பாவங்களுக்கு மன்னிப்பைத்தரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுமளவுக்குப் போதுமான விசுவாசம் உள்ளவராயிருக்க வேண்டும். வேதாகமத்தில் உள்ள மற்ற எல்லா கூற்றுக்களும் அப். 2:38ல் கூறப்பட்டவைகளுக்கு ஒத்திசைவாயுள்ளன, ஏனெனில் ஒரே ஆவியானவரே ஒவ்வொரு கூற்றையும் எழுதினார்.

மேலும், பாவி ஒருவர் இயேசுவை விசுவாசித்து, தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறும் போது, இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவராகி, மறுபடி பிறக்கிறார் என்பதை ஒவ்வொரு பிரசங்கியாரும் ஏற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தத்தை ஒருவரும் சந்தேகிப்பதில்லை; வேதாகமத்தில் தேவன் கொடுத்துள்ள முன்மாதிரிக்கு இது முழுமையாகப் பொருந்துகிறது. மனிதர்கள் இன்றைய நாட்களில் வேறு வழிகளைக் காட்டுகின்றனர், ஆனால் அவர்கள் அனைவரும், தேவனுடைய முன்மாதிரி சரியானதென்று கூறுகின்றனர். அறியாத ஒரு அளவையினுள்ளே நமது ஆத்துமாவை விட நீங்களும் நானும் தயாராயிருக்க முடியுமா? நித்தியத்தினி மித்தமாக, கேள்வி எழுப்பக் கூடாத வகையிலான ஒரு அளவையைப் பயன்படுத்துவதே நமக்குச் சிறந்ததாகும்.

என்றால்,தேவனுடைய சபைக்குள் பிரவேசிப்பதற்கான சட்டம்தான் என்னவாக இருந்தது? முதலாவது, இயேசு கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கிக்க வேண்டியிருந்தது. பிறகு, பிரசங்கியார், மக்களிடம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி கூறினார். பேதுருவால் பிரசங்கிக்கப் பட்ட தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்றும், அவ்விதமாய் அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் இணைந்தனர் என்றும் வேதாகமம் நமக்குக் கூறுகிறது. இதையே நீங்களும் நானும் செய்தால் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா என்பதை நாம் அப்பொழுது அறியாவிட்டால், வேறு எப்பொழுது நாம் அறியமுடியும்? தேவனுடைய தரமான முன்மாதிரியைப் பின்பற்றுதல், நமக்கு அவருடைய

கிருபையைத்தர உத்தரவாதமளிக்காதென்றால், வேறு எதை நாம் பின்பற்ற முடியும்?

அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில், முன்மாதிரி சபையின் உறுப்பினராவதற்கான விதிகள் தெளிவாக்கப் பட்டுள்ளன. இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவைபற்றி ஒரு பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது. இம்மாபெரும், முக்கியமான உண்மைகள் விசுவாசிக்கப்பட்ட பிறகும் (அப். 2:36) பாவிகள் இரட்சிக்கப் படாமலேயே இருந்தனர்; அவர்கள் இன்னும் சபைக்குள்ளாக வராமலேயிருந்தனர். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் மட்டுமல்ல, மனந்திரும்புதலும், பாவமன்னிப்புக்கான ஞானஸ் நானமும் சேர்ந்துதான் சபைக்குள்ளாக ஒருவரை உறுப்பின ராக்கும் என்ற சட்டத்தைப் பரிசுத்த ஆவியானவர் வரையறுத் துள்ளார். நீங்கள் ஆராதிக்கும் சபை, முன்மாதிரியான சபையைச் சரியாகப் பின்பற்றியதென்றால், அதில் உறுப்பினரா வதற்கு இதே விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

எடுத்துக்காட்டாக, முன்மாதிரி சபையில் குழந்தைகள் உறுப்பினராகவில்லை, ஏனெனில் அதன் ஒவ்வொரு உறுப்பின ரும் வசனத்தை "ஏற்றுக்கொண்டவர்களாகவே" இருந்தனர் (அப். 2:41). முன்மாதிரி சபையில் உறுப்பினராவதற்கு, சாதகமான வாக்குகளைப் பெறுவது அவசியமாயிருக்க வில்லை; வசனத்தை ஏற்றுக்கொள்வதே முக்கியம் என்று நாம் படிக்கிறோம்.

மேலும், முன்மாதிரி சபையின் நாட்களில், இரட்சிக்கப் பட்ட பிறகும் கூட சபை உறுப்பினராக இல்லாத நிலை என்பதைப்பற்றிய எண்ணம் இருந்ததில்லை. இதற்குமாறாக, இரட்சிக்கப்படாத வரையிலும் ஒருவரும் சபைக்குள் சேர்ந்ததில்லை, இரட்சிக்கப்பட்டவுடன் கர்த்தர் அவர்களைத் தமது சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப். 2:47) என்ற நிலையே இருந்துள்ளது.

## விசுவாசத்தின் ஒரே சட்டத்திற்கான தேவனுடைய முன்மாதிரி

"அப்போஸ்தலருடைய உபதேசம்தான்," முன்மாதிரி சபையில் விசுவாசத்திற்கான சட்டம் அல்லது மார்க்கக் கோட்பாடாக இருந்தது (அப். 2:42). அதாவது, முன்மாதிரி

சபையிலிருந்த உறுப்பினர்கள், தாங்கள் மோசே, சாலமோன், தாவீது அல்லது யோவான்ஸ்நானன் ஆகிய எவருடைய உபதேசத்தினாலும் கட்டப்பட்டிருக்கவில்லை என்று புரிந்து கொண்டிருந்தார்கள். உங்கள் சபையானது, ஜோசப் ஸ்மித், மேரி பேக்கர் எடி, எல்லன் ஜி. வைட், ஜான் வெஸ்லி, மார்ட்டின் லூத்தர், அலெக்சான்டர் கேம்ப்பெல், சபை ஆலோசனைக் குழுக்கள், போப், அல்லது சபையின் முற்பிதாக்கள் போன்றோருடைய உபதேசத்திற்குக் கட்டுப்பட்டிருந்தால், அது முன்மாதிரி சபையினால் அறியப்படாத ஒன்றிற்குக் கட்டுப் பட்டுள்ளதாகும். முன்மாதிரி சபையின் உறுப்பினர்கள் உண்மையின் ஆவியை வஞ்சகத்தின் ஆவியினின்று பிரித் துணர்ந்து தீர்மானிக்க, "அப்போஸ்தலர்கள் இதை உபதேசித் தார்களா?" என்ற ஒரே ஒரு திட்டமான அளவையைப் பெற்றிருந்தனர். (1 யோவா. 4:6ஐப் பார்க்கவும்.)

## சகவாசத்திற்கான தேவனுடைய முன்மாதிரி

முன்மாதிரி சபையில் ஐக்கியத்தின் ஐசுவரியங்களும், ஆழமும், உண்மையான ஒருமைப்பாடும் இருந்தது. அவசரத் தேவையிருந்த சமயங்களில், உறுப்பினர்கள் தங்களுக்குள்ள சொத்துக்களை விற்று அவையெல்லாவற்றையும் சபைக்குக் கொடுத்தனர் (அப். 2:44, 45). சாதாரண சமயங்களில் தங்களது சொந்தக் குடும்பங்களை விசாரிப்பதற்குத் தேவையானவை களை அவர்கள் தங்களிடத்தில் வைத்துக்கொண்டனர் (1 தீமோ. 5:8, 16). இரண்டு சமயங்களிலும், சகோதர அன்பை அடிப்படையாகக் கொண்ட உண்மையும் (1 பேது. 1:22) மற்றும் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பினால் ஏவப்பட்ட உண்மையும் (2 கொரி. 8:8) காணப்பட்டது.

## கர்த்தருடைய பந்திக்கான தேவனுடைய முன்மாதிரி

முன்மாதிரி சபையில், உறுப்பினர்கள் அனைவரும் வாரத்தின் முதல் நாளில் கூடி வந்தது, ஞாயிறு வேதபாட சாலைக்காகவோ (அது நல்லதாயினும்), பிரசங்கியாரின் பிரசங்கத்தைக் கேட்பதற்காகவோ (அது நல்லதாயினும்) அல்ல,

ஆனால் நினைவு கூறத்தக்கவொன்றில் பங்கேற்பதற்காகவே, (அப். 20:7). நீங்கள் ஆராதிக்கும் சபை ஒவ்வொரு ஞாயிறன்றும் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கின்றதா? அப்போஸ் தலருடைய உபதேசத்தைப் பின்பற்றிய முன்மாதிரி சபையி லிருந்து அது மாறியதாயிருப்பின், நீங்கள் அந்த சபையை விட்டு வெளிவர வேண்டும்.

## சபையில் ஆராதனைக்கான தேவனுடைய முன்மாதிரி

முன்மாதிரி சபையில் இரட்சிக்கப்பட்ட மக்கள் அதன் பிறகு என்ன செய்தனர்? அவர்கள் எவ்விதம் ஆராதித்தனர்? முதல் கிறிஸ்தவர்கள், எவ்விதம் ஆராதித்தனர் என்று நாம் கற்பனை செய்ய வேண்டியதில்லை, ஏனெனில் அங்கிகரிக்கப்பட்ட ஆராதனைக்கு வேதாகமம் ஒரு முன்மாதிரியை வைத்துள்ளது. அப். 2:42, “அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்” என்று நமக்குக் கூறுகிறது.

ஆவியினால் - ஏவப்பட்ட பிரசங்கியார்களின் உபதேசத்தில் அந்த மக்கள் தரித்திருந்தனர். அவர்களுடைய உபதேசம், ஒரு நாமகரணக் கூட்டத்தின் தெளிவற்ற கருத்தாகவோ, அல்லது மனிதர்களால் எழுதப்பட்ட சில சட்ட நூல்களாகவோ இருக்கவில்லை. அப்போஸ்தலருடைய உபதேசமானது உண்மையானதாகவும், தேவன் விரும்பிய அளவு விசாலமான தாகவும் இருந்தது.

மதத்தில், அப்போஸ்தலரின் உபதேசத்தைத் தவிர, வேறு எதுவும் உண்மையானதாக இருக்க முடியாது (மத். 10:14, 15, 40; 15:13ஐக் காண்க). அநேக சபைகள் தங்களை, இன்றைய நாட்களில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்ந்து அர்ப்பணித் துக் கொண்டுள்ளன; அவர்களின் போதகர்கள் அரசியல் சூழ்நிலையைப்பற்றி விரிவுரைகள் அளிக்கின்றனர். புகழ்பெற்ற பல நாமகரணக் கூட்டங்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருப்பதை மறுப்பதோடு கூட, கிறிஸ்தவர் கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் மக்கள் கூட வேதாகமத்தைத் தொடர்ந்து படிப்பதில்லை. ஞாயிறு வேதபாட சாலையிலேயே அநேகர் திருப்திப்பட்டுக் கொள்

கின்றனர். நண்பர்களே, அப்போஸ்தலருடைய உபதேசத்தைத் தொடர்ந்து ஒருவர் கற்றுக் கொள்ளாவிடில், மதரீதியாக அவர் சரியான நிலையில் இருக்க முடியாது; வேறு எவ்வழியிலும் அவர் எது சரியானதென்று அறிய முடியாது.

சபையில் முதன்முதல் உறுப்பினரானவர்கள், அப்போஸ் தலருடைய உபதேசத்தைப் பின்பற்றி, சகவாசத்தில் தொடர்ந்து தரித்திருந்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் சிநேகிதராயும், ஒருவருக்கொருவர் உறுப்பினராயும் இருந்தனர். இவ்விதமாக, சகவாசத்தில், அவர்கள் தங்கள் உடமைகளைத் தாராளமாக வழங்கினர். அவர்கள் ஆடம்பர மான விருந்துகளுக்கோ அல்லது சபை மூலமான எவ்வித வியாபாரத் திட்டங்களுக்கோ தங்களை அர்ப்பணிக்கவில்லை; மாறாக, தங்கள் இருதயங்களில் இருந்து அவர்கள் கொடுத்தனர்.

அப்போஸ்தலருடைய உபதேசமானது, முதல் கிறிஸ்தவர் கள் கர்த்தருடைய பந்தியில் தொடர்ந்து தரித்திருந்து, அப்பத்தைப் பிட்கும்படி அவர்களை அர்ப்பணிக்கச் செய்தது. அப்போஸ்தலருடைய உபதேசம் அவர்களது இருதயங்களில் நாட்டப்படாதிருந்தால், அவர்கள் தொடர்ந்து அப்பம் பிட்க வேண்டும் என்பதை அறியாதிருப்பார்கள். அநேக மக்கள் இன்று ஒழுங்கற்ற அல்லது ஒழுங்குள்ள இடைவெளிகளில் அப்பம் பிட்குதலில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்; ஆனால் நீண்டகாலத்திற்கு முந்திய தேவனுடைய முன்மாதிரியில் அங்கிகரிக்கப்பட்ட சபையானது தொடர்ந்து அப்பம் பிட்கு தலில் தரித்திருந்தது. எபி. 10:25, 1 கொரி. 16:2, மற்றும் அப். 20:7 இவற்றின் மூலம், அப்போஸ்தலருடைய உபதேசமானது, கிறிஸ்தவர்களை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அப்பம் பிட்கும்படி கூடி வரச்செய்வதில் வழி நடத்தியது என்று அறிகிறோம். அந்த போதகர்களிடமிருந்து கற்றுக்கொண்ட அதே உபதேசத்தின்படியே, எருசலேமிலிருந்த சபையார் வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்டு, பாத்திரத்தில் பானம் பண்ணினர். ஒரு சபையானது, வாரத்தின் முதல் நாள்தோறும் பந்தியில் கலந்து கொள்ள வேண்டும் என்பது தேவன் அங்கீகரித்த நியமம் ஆகும். நமக்கு வழிகாட்டவைக்கப்பட்ட இந்த முன்மாதிரியிலிருந்து இன்றைய நாட்களில் நாம் குறைவுபடக் கூடாது.

தேவனுடைய முன்மாதிரி சபையில் ஜெபங்கள் என்பது

*ஆராதனையின் மற்றொரு அம்சமாயுள்ளது; இந்த அம்சத்திலும், சகோதரர்கள் தங்கள் விண்ணப்பங்கள் பலன் தருகின்றன என்ற விசுவாசத்துடன் தொடர்ந்து தங்களை ஒப்புக் கொடுத்தனர். இந்நாட்களில் கிறிஸ்தவர்கள் மற்றும் ஊழியர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் சிலர் ஜெபத்தை நம்புவதில்லை; அவர்கள் நவீன கிறிஸ்தவர்கள்; உலகத்தின் ஓட்டத்தில் எதையும் ஜெபம் எவ்விதம் மாற்றக் கூடும் என்பதை அவர்கள் காண முடியாது. ஜெபத்தின் மதிப்பைப்பற்றிய கலந்துரையாடலில் இப்பொழுது நாம் ஈடுபடப் போவதில்லை. இருப்பினும், தேவனால் ஏவப்பட்ட மனிதர்களால் போதிக்கப்பட்டு, இந்த பூமியில் உண்டான முதல் சபையில், அதன் உறுப்பினர்கள் தொடர்ந்து ஜெபத்தில் தரித்திருந்தனர் என்பதை நாம் நினைவு கூற வேண்டும். நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள இந்த முன்மாதிரியிலிருந்து நாம் குறைவுபடாதிருக்கக் கடவோம்.*

*அப்போஸ்தலர்கள், கிறிஸ்தவர்களுக்கு, சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப்பாடல்களை தேவனை நோக்கிப் பாடும்படியும், தங்கள் இருதயங்களில் ஒருவருக்கொருவர் பாடல்களை தியானித்துப் பாடும்படியும் போதித்தனர். ஒரு சபைக்கு போதித்ததையே அவர்கள் ஒவ்வொரு சபைக்கும் போதித்தனர். இவ்விதமாக, உதடுகளின் கனியாகிய, ஸ்தோத்திரங்களைப் பாடுவது ஆராதனையின் ஒரு அம்சமாகும் என்பது அப்போஸ்தலர்களின் உபதேசமாக இருந்தது.*

## தேவனுடைய முன்மாதிரியின் மற்ற பண்புகள்

*ஜெபத்தின் முக்கியத்துவத்தில் காட்டப்பட்டபடி, முன்மாதிரி சபையானது தேவனுடைய வழிநடத்துதலைச் சார்ந்திருந்தது (அப். 2:42; 4:24; 12:12). முன்மாதிரி சபையில், ஒரே இருதயம் மற்றும் ஒரே குரலில் அவர்கள் தேவனை மகிமைப்படுத்துவதற்காக (ரோமர் 15:6), ஒரே இருதயமும், ஐக்கியக்கட்டும் அனைத்து உறுப்பினர்களையும் ஒரே சபையாக்கிற்று (அப். 4:32). நீங்கள் ஆராதிக்கும் சபை, பிரிவுக் கூட்டங்களில் ஒரு பிரிவுக் கூட்டமாக, சபைகளில் ஒரு சபையாக, நாமகரணக் கூட்டங்களில் ஒரு நாமகரணக் கூட்டமாக இருக்குமென்றால், "காணப்படாத சபை" என்றழைக்கப்*

*படும் அக்கிளை, முன்மாதிரி சபையல்ல.*

*முன்மாதிரி சபையில், ஒழுங்கு முறை இருந்தது. தகுதியற்ற உறுப்பினர்கள், ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டனர் (அப். 5:1-11ஐக் காண்க; 1 கொரி. 5:13). மேலும், முன்மாதிரி சபை சுவிசேஷ அறிவிப்பில் வாஞ்சையுள்ளதாய் இருந்தது. ஒவ்வொரு உறுப்பினரும் (அப். 8:4) - "ஒவ்வொரு முழுநேர ஊழியர்" மட்டுமல்ல - இரட்சிக்கப்பட்டதற்கு சந்தோஷமாய் இருந்ததோடு, அவர்கள், மற்றவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார்கள். ஆதிகிறிஸ்தவர்கள் அன்றாடம் இயேசுவைப் போதிப்பதிலும் ஓய்ந்து போகாமல் ஈடுபட்டு (அப். 5:28, 42) அவர்களுடைய போதகத்தினாலே "எருசலேமை நிரப்பினார்கள்." மேலும், முன்மாதிரி சபையில் உண்மையான சந்தோஷம் இருந்தது. அவர்கள் "மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும்" (அப். 2:46) தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்.*

## முடிவுரை

*எல்லா நாமகரணக் கூட்டங்களிலிருந்தும் விடுதலையாகி, தேவனால் அங்கிகரிக்கப்பட்ட முன்மாதிரியான சபைக்குத் திரும்பி, உங்களை அதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நாமனைவரும் இத்தெய்வீக முன்மாதிரிக்குத் திரும்புவோமே யானால், மதத்தில் எவ்வளவு ஆச்சரியமான ஒருமைப்பாடு உண்டாயிருக்கும்! நாமனைவரும் ஒன்றாயிருந்து, ஒரே வீட்டில் ஜெபம் செய்து, ஒன்றாகக் கர்த்தருடைய பந்தியில் போஜனம் செய்வோம். 36 அங்குல நீளமுள்ள ஒரு கஜக்கோல் ஒன்றே அங்கீகரிக்கப்பட்டதுபோல, அங்கிகரிக்கப்பட்ட முன்மாதிரி சபையும் ஒன்றே ஒன்றுதான் உள்ளது. தரமான கஜக்கோலை மக்களை பின்பற்றுகையில், வித்தியாசப்பட்ட அளவீடுகளுக்கிடையில் தெரிவு செய்யவேண்டிய அவசியம் இருக்காது; நாமும் தரமான ஒரே சபையைப் பின்பற்றும் போது, வித்தியாசப்பட்ட சபைகளிடையே தெரிவு செய்ய வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்காது!*